றிகண்டிசன்
HONDA
250 C. C.
சிறந்த முறையில்
உடன் பெற்றுக்
கொள்ளலாம்
மலிவு விலையில் பிசென்ஸ்
ஒழுங்கு செய்யப்படும்
பல்க்கன் ஏஜன்சி
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம்

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 11 ஜ-அவ் 6 இதழ் 43
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-3-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-3-24
PERIODICALS DIVISION
LIBRARY

இன்று
அதிக கிராக்கியானது
குறைந்த செலவில்
கூடிய பயணம் செய்யக்
கூடிய
குடும்ப வாகனம்.
பல்க்கன்
ஸ்டர்கள்
இம்மாத இறுதியில் வரு
கின்றன ஏயாற்றத்தை
தவிர்க்க இன்றே
'புக்' பண்ணி விடுங்கள்
பல்க்கன் ஏஜென்சி
யாழ்ப்பாணம். போன்: 685

நாடுகண்ட கனவு நனவாகிறது!

விக்டோரியா திட்டம் ஜனாதிபதி பெருமிதம்

புதிய கடுகதி ரயில் சேவை இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கொழும்பு புதிய இரவு கடுகதி ரயில்சேவை இன்று மாலை ஆரம்பமாகிறது

மாலை 5 மணி 55 நிமிடத்திற்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் புதிய இரவு ரயில், யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை மாலை 6-18க்கு வந்தடைந்து 6.25க்கு கொழும்பு நோக்கிப் புறப்படும் இந்த விசேஷ கடுகதி ரயில் அடுத்த நாட்காலை 4-10க்கு கொழும்பு கோட்டையைச்சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனுடன், வழமையான இரவு தபால் ரயில் சேவை வழக்கம்போல இரவு 7-05க்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

காங்கேசனதுறையிலிருந்து புறப்படும் புதிய ரயில், யாழ்ப்பாணம், கொடிகாமம், கிளிநொச்சி, மாங்குளம், வவனியா, மதவாச்சி, அனுராதபுரம், மாகோ, குருநாகல், பொல்காவலை, மருதானை, கோட்டை ஆகிய ரயில் நிலையங்களில் மட்டுமே தரித்து நிற்கும். (கொ)

எம். பி.க்களின் தெரிவு:

புதிய முறை பற்றிய ஜனாதிபதி கூற்று

தமிழ்க்காங்கிரஸ் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தொகுதிகளில் இருந்து எம். பிக்கள் தெரிவு செய்வதற்குப் பதிலாக அபிவிருத்தி மாவட்டங்கள்மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள் என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று தெரிவித்திருப்பது, தேர்தல் வரையறை ஆணைக்குழுவின் அதிகார வரம்புக்கு முற்றும் முரணானதாக இருப்பதால், இவ்விடயமாக ஜனாதிபதிக்கும் ஆணைக்குழு செயலாளருக்கும் எழுதவேண்டுமென்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்தது.

உபதலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் தமிழ்க்காங்கிரஸ் கமிட்டி கூடியது.

எம். பிக்கள் தெரிவில் புதிய முறைபற்றி ஹரிஸ்பத்துவ தொகுதி வைபவத்தில் ஜனாதிபதி பேசியதாக வானொலியிலும் 'ஈழநாடு' பத்திரிகையிலும் வெளியான செய்திபற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் பேச்சு தேர்தல் வரையறை ஆணைக்குழுவின் அதிகார வரம்புக்கு, நேர்மாறாக - முரணாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டு, இதுபற்றி அவருக்கும், ஆணைக்குழு செயலாளருக்கும் எழுதவேண்டும்என்றும் அப்படி முரணானதென்றால், என்ன செய்வது என்பது பற்றியும் மீண்டும் தமிழ்க் காங்கிரஸ் மகஜர் சமர்ப்பிப்பதுபற்றியும், மீண்டும் ஆணைக்குழு முன்பாக தமிழ்க் காங்கிரஸ் சாட்சியம் அளிக்க வேண்டியிருப்பதால் திட்டவட்டமாக உத்தியோக பூர்வமான நிலையை அறிவிக்குமாறும் ஜனாதிபதிக்கும் ஆணைக்குழு செயலாளருக்கும் கடிதம் எழுதுமாறு தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் பொதுச் செயலாளரை பணித்துள்ளது.

தேர்தல் வரையறை ஆணைக்குழுமுன்னிலையில் தமிழ் காங்கிரஸ் சாட்சியமளித்தபோது, தெரிவிக்கப்பட்ட சிலவிஷயங்களை ஆணைக்குழுவினர் ஆணைக்குழுவின் அதிகாரவரம்புக்கு உள்ளடக்கவில்லையென்று தெரிவித்தபோது ஜனாதிபதிக்கு இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பித்து அவ்விஷயங்களை இடம்பெறும் விதத்தில் இதற்குப் பரிகாரம் காண அதிகாரவரம்பை திரு

(8-ம் பக்கம் பார்க்க)

'6 ஆண்டில் மகாவலி பூர்த்தி நிதி உதவியும் கிடைத்தது"

(கண்டி)

"நமதுநாட்டின் நீண்டகாலக்கனவொன்று இன்று நனவாகிறது. இதன் மூலம், நாம் மட்டுமன்றி, நமது வருங்காலச் சந்ததியினரும் சுபீட்சத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழும்நிலை இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று விக்டோரியா நீர்த்தேக்கத்திட்ட அங்குரார்ப்பண விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் 5 பாரிய நீர்த்தேக்கங்களில் மிகவும் முக்கியமானதென்று கருதப்படும் விக்டோரியா நீர்த்தேக்க திட்டவேலைகளை; பொத்தான் ஒன்றை முடக்கி, பெரும்பாறை ஒன்றை தகர்த்து வைத்தன் மூலமாக ஜனாதிபதி நேற்று சுப வேளையில் ஆரம்பித்து வைத்தார். இந்த அங்குரார்ப்பண விழாவைக் கண்டுகளிக்க பெருந்திரளான மக்களும், பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ராஜ தந்திரிகளும் வந்திருந்தனர்.

6 ஆண்டுகளில் பூர்த்தியாகும்

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 30வருடங்களில் நிறைவேற்றப்படுமென்று எத்ர்பார்க்கப்பட்ட மகாவலித் திட்டம், ஆறு ஆண்டுகளில் பூர்த்திபெறவிருக்கிறது. இதன்மூலம் 3 லட்சம் ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கும் பத்து லட்சம் மக்கள் குடியமர்த்தப்படுவார்கள். ஐந்து பிரதான நீர்த்தேக்கங்களுக்கு பணஉதவி நமக்கு கிடைத்திருப்பதுடன் நிபுணத்துவ சேவையும் பெறப்பட்டுள்ளது. நமது நீண்டகாலக் கனவொன்று இன்று நிறைவு பெறுவதையொட்டி நாம் மகிழ்ச்சியடைகின்றோம். விக்டோரியா நீர்த்தேக்க திட்ட வேலைகள் நான்கு ஆண்டுகளில் பூர்த்திபெறும்'' என்று ஜனாதிபதி கூறினார்.

முன்மாதிரியாக நவசீன

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில்,மகாவலித் திட்டம் எமக்கு ஒரு சவாலாக அமைந்திருந்தபோதிலும், மக்களின் பூரண ஒத்துழைப்புடன் இத்திட்டத்தை பூர்த்திசெய்

(8ம் பக்கம் பார்க்க)

தி.மு.க. தனியான தேர்தல் அறிக்கை

[திருச்சி]

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத்தேர்தலையொட்டி திராவிட முன்னேற்றக் கழகம் தனியான ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிடும் என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று இங்கு நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

ஆனாலும், தோழமைக் கட்சிகளுடனான தேர்தல் அறிக்கையும் பின்னர் வெளியிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சின்னத்துரை காலமானர்

[கொழும்பு]

பிரபல தொழிலதிபரும் சமாதான நீதவானுமாகிய 'லீலா' திரு. எஸ். ரி. சின்னத்துரை கொழும்பில் காலமானர்

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள பல தொழில் நிறுவனங்களின் ஸ்தாபகரான இவர் பெரும் சமூகசேவையாளருமாவார்.

அகிலஇலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் மருதானை கப்பித்தாவத்தை ஆலய தர்மகர்த்தாவாகவும் இருந்துவரும் இவர் முன்னர் புறக் கோட்டை [illegible] போதிராஜாசமிதியின்போஷகராகவும் இருந்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழையில் 1903ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி பிறந்த இவர், இளவயதிலேயே தலைநகர் வந்து முதலில் கடைச்சிப்பந்தியாகப் பணியாற்றி, பின்னர் சொந்த முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் முன்னேறி, கலண்டர், டயரி வெளியீட்டில் முழு ஈழத்திலுமே தனிப்பெயர் எடுத்துக் கொண்டவர்.

தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்கள மக்கள் [illegible] பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பி .எம். சி. 6 சிலின்டர், 4 சிலின்டர் என்ஜின்கள் கியர் பொக்சுடன், 5 ரொன் பி. எம். சி. லொறி தனி கியர் பொக்சுகள், பின் அச்சுகள், கப், கிறவுண் வீல் பீனியனுடன் விற்பனையாகின்றன.

விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

துரை
ஆர். ஜி. பில்டிங்ஸ்,
66, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7750

கிளை:
துரை விற்பனவு
நிலையம்,
(THURAI SALE CENTRE)
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

வரி விளம்பரம்

தேவை

யாழ். நகருக்குள் நல்ல வசதியுடைய வீடு அல்லது இட்டங்கி வாங்குவதற்கு உடன் தேவை. நல்ல விலை கொடுத்து வாங்கப்படும். விபரங்களுக்கு றேடியோ மனுவல், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5246

ஓய்வு பெற்ற உத்தியோகத்தருக்கு அவரது மனைவியுடனும், இரண்டு பிள்ளைகளுடனும் குடியிருப்பதற்கு ஒரு தனி வீடு யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும் S. கனகசுந்தரம், 60, வேம்படி வீதி' யாழ்ப்பாணம். 5283

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஈ. என். மொடல் (Austin Cambridge) ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் விற்பனைக்குண்டு. இடம்: சந்திரா பெனியன் தொழிற்சாலை, பிறவுண்வீதி, 4-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 5275

மானிப்பாயில் சகல வசதிகளுமுள்ள வீடும், பிரயோசனமுள்ள வளவும் விற்பனைக்குண்டு. சி. அரிச்சந்திரன், சோதி வேம்படி லேன், மானிப்பாய். 5284

பழைய வீட்டிலிருந்து கழட்டின ஜன்னல் நிலையும் கதவுகளும், கதவு நிலையும் கதவுகளும். 713, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5281

புதிய சுவேகா டீலக்ஸ் மொபட் மோட்டார் சைக்கிள் (சொக்கட்சோபர் ஸ்பீடோ மீட்டர் போன்ற உபகரணங்கள் இணைத்தது). கலனுக்கு 350 கி. மீற்றர் ஓடக்கூடியது. காலை 8 தொடக்கம் 4 வரை பார்வையிடலாம். 28, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 5288

பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சியும், 3 மாத மின்னியல் டிப்ளோமா பயிற்சியும் 10-04-1980ல் ஆரம்பமாகின்றன Institute of Engineering Technology, 11/B, Momsac Building, Stanley Road, Jaffna. 5259

WANTED

Vacancies exists for immediate employment for the post of Storekeepers.

1. Household & Hardware Dept.
2. Farming & Fishing Dept.

Applicants for Storekeeper for each of the above Departments should have at least five years Working knowledge of the Subjects they are required to handle. Applicants Should provide a security of Rs. 5000/- and will be paid a salary of Rs. 600/- inclusive of E.P.F. Apply Autos Ltd, Jaffna. 5289

தொலைபேசிச் சேவை சீர்கேடு

(மன்னார்)

மன்னாரில் தந்தி, தொலைபேசிச் சேவை சீர்கேடடைந்துள்ளது.

தூர இடங்களுக்கு தொலைபேசித் தொடர்பு கொள்ளப் பலமணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றில்
பின்னுறுதிக்கட்டளை
பற்றிய

அறிவித்தல்

காலஞ்சென்ற சின்னத்தம்பி சோமசுந்தரம் என்பவரது மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்.

மரணசாதன)
நியாயாதிக்கம்)

சின்னத்தம்பி சோமசுந்தரம் கைம்பெண் இராசம்மா, கரப்பிட்டியந்தனை, காரைநகர்.

-மனுதார்.

இல: ரி/02

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளைப்படி.

தா· குலஞானம்
பதிவாளர்.

1980ம் ஆண்டு ஐப்பசிமாதம் 18ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
7-2-80

காரணம் காட்டும் திகதி 28-3-80க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தா. குலஞானம்
பதிவாளர்.
5270

முதற்கண் இறுதிக்கட்டளை அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் மேற்கு, தங்கோடையைச் சேர்ந்த பொன்னையா தாமோதரம்பிள்ளையின் மரணசாதனச்சொத்து விடயத்தில்,

- மரணமெய்தியவர்

மாரணசாதனத் தத்துவ வழக்கு இல: 12

தாமோதரம்பிள்ளை கைம்பெண் இராசலட்சுமிதேவி, தங்கோடை, காரைநகர்.

- மனுதார்.

மேற்படி வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க குறித்த மரணசாதனம் நிரூபிக்கப்பட்டதென்ற முதற்கண் இறுதிக்கட்டளை பதியப்பட்டிருக்கிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1980ம் ஆண்டு பங்குனி மாதம் 3-ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்.

தயாரித்தவர்;
அ. மரியாம்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.

உண்மைப்பிரதி
அ. மரியாம்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி.
5273

வியாபாரம் பெருக
விளம்பரம் [illegible]

அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த கொக்குவில் கிழக்கு சுந்தரம் பரமேஸ்வரனின் ஆதனங்களும்மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

சுந்தரம் பரமேஸ்வரன் கைம்பெண் புவனராணி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில.

மனுதார்

இல. தத்துவம்: 3505

எதிர்

1. பரமேஸ்வரன் மகள் நளினி (பராயமற்றர்)
2. பரமேஸ்வரன் மகள் பராசினி இருவரும் கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (பராயமற்றவர்)
3. சுந்தரம் பூதப்பிள்ளை, கொக்கன், காங்கேசன்துறை பராயமற்ற 1-ம், 2-ம் எதிர்வாதிகளின் வழக்குப் பாதுகாவலர்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்ணயிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்நால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு மாசிமாதம் 29-ம் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

மேற்படி காலம் 2-5-80 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைவு:
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.
5132

இன்றைய பலன்

பங்குனி மாதம் 11ம் திகதி
(24-3-1980)
திங்கட்கிழமை

மேடம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களையும் கொண்டு வரும். கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக்கிடைக்கும். பொதுவாக நல்ல தினம்.

இடபம்: சீறிவரும் வரும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும். அடக்கமும் வேண்டும். வீண்பழிக்குமாளாகுவீர்கள். பொறுமை நன்று.

மிதுனம்: வீண்வார்த்தைகளால் மனதுபுண்படும். எடுத்த காரியம் ஏமாற்றமளிக்கும். நல்லதைச் செய்யினும் கெட்டது தலைமயே.

கடகம்: இனிக்கப்பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள். அரசியல் வாதிகள் பெருமையடைவர். வாழ்விலும் மாற்றம் ஏற்படும்.

சிங்கம்: அதிக ஆசை வைப்பதன் மூலம் அவதிப்படுவீர்கள். திருடர் பயத்திற்குமிடமுண்டு. மௌனமே சிறந்தது.

கன்னி: புதிய தொழில்களை பனம்நாடும். பூமியால் லாபமுமுண்டு. பெற்றோர் ஆதரவும் தப்பாமல் கிட்டும்.

துலாம்: நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவான தினம். பொருள்வரவுக்குமிமுண்டு. புண்ணிய யாத்திரையுமேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: அக்கினி பீடைக்குமிடமுண்டு. [illegible] தின் சாயலும்தாக்கும். இடைக்காலப் பிரிவுமுண்டு.

தனுசு: சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகள் பெருகும். களஸ்திர வழியாலும் பொருள்வந்துசேரும்.

மகரம்: சிறியவிடயத்திலும் பொல்லாங்கு நேரிடலாம். தொழிலிலும் வீண்வம்புகள் தென்படும். நிதானப்புத்தி விரும்பத்தக்கது.

கும்பம்: பிதா வழிப் பெருமையுண்டு. ஒளிமயமான வாழ்க்கையுண்டு. உல்லாசப் பயணமும் ஏற்படலாம்.

மீனம்: பணம் பத்தும்செய்யும். பரந்த மனப்பான்மையுடன் செலாற்றுவீர்கள். புதுமனைகட்டுவதிலும் ஆர்வம் பிறக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

கரைதுறைப்பற்று
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
முல்லைத்தீவு.

கேள்வி விளம்பரம்

கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பின்வரும் சாக்குகளை கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. கேள்வி கோர விரும்புவோர் 10-4-80-ந் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "தலைவர், கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்திவு" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்சப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சாக்கு கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- இச்சங்கத்தில் கட்டிப் பற்றுச்சீட்டைட் பெற்றுக்கொள்ளவும். வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் இவற்றைப் பார்வையிடலாம்.

அரிசி	—	2½ புசல் சாக்கு	—	5000
அரிசி (சீனு)	—	2 புசல் சாக்கு	—	1000
சீனி	—	3 புசல் சாக்கு	—	500
மா	—	3 புசல் சாக்கு	—	500
நவதானியம்	—	3 புசல் சாக்கு	—	300
உப்புச் சாக்கு	—	சாக்கு	—	30
மா (அல்லரியன்)	—	சாக்கு	—	200
பொலித்தீன்	—	மா பை	—	150

பொதுமுகாமையாளர்.

5279

உடற் பயிற்சியில் வெற்றி பெற்றோர்

(வேலணை)

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவுப் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டி அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மொத்தமாக 13 குழுக்கள் பங்குபற்றிய போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு:-

13வயதுக்குட்பட்ட ஆண்கள்- 1-ம் இடம் றே. க. பாடசாலை, மண்டைதீவு. 2 - ம் இடம் நாகேஸ்வரி ம. வி. சரவணை.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள்- றே. க. பாடசாலை, நாரந்தனை, புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை சேர் வை. து. ம. ம. வி. வேலணை.

13வயதுக்குட்பட்ட பெண்கள்- சென். மேரிஸ் பெண்கள் பாடசாலை ஊர்காவற்றுறை, சிறிய புஷ்ப மகளிர் பாடசாலை கரம்பன மண்டைதீவு, ஆர். சி. ரி. பாடசாலை.

17வயதுக்குட்பட்ட பெண்கள்;- சேர். வை. து. ம. ம. வி. வேலணை, சென். மேரிஸ் பெண்கள் பாடசாலை ஊர்காவற்றுறை, சிறிய புஷ்பமகளிர் பாடசாலை கரம்பன.

(கு)

பொருட்காட்சி

(வேலணை)

வேலணை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான பொருட்காட்சி அடுத்த மாதம் 1-ம், 2-ம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இப்பொருட்காட்சியில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கலந்து கொள்கின்றார். பொருட்காட்சிகளுக்கான ஏற்பாடுகளை அமைப்பாளர் திரு. எஸ். ஏ. ஈ. இரத்தினராசா செய்து வருகின்றார். (கு)

பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வசித்த முத்து முகம்மது அஷ்ரவ் பெண் ஹமீதாவின் சொத்தினதும் உடமைப் பொருட்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் வசிக்கும் முகம்மது அப்துல்காதர் மீரா மொகிதீன்

மனுதார்

தத்துவ வழக்கு
இலக்கம் த/ 3507

மேலேயுள்ள இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவான் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொகுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பினனுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1980ம் ஆண்டு சித்திரைமாதம் 11ம் திகதி முற்பகல் 9மணிக்கு அந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1980ம் ஆண்டு பங்குனி மீ 17ம் திகதி இந் நீதிமன்றத்தின் உத்தரவின்படி

பொ. பாக்கியநாதன்
(ஒப்பம்)
பதிவாளர்.

5256

மணிவாக்கு

மனிதனுக்குஉண்மையான பகை காமம், கோபம், பற்று, மதுபானம், பெருமிதம், துன்பம் ஆகும். அவைகளை வென்றால் ஏனைய பகைகளை இலகுவாய் வெல்லலாம்.

—மகாத்மாகாந்தி.

மக்கள் கருத்து

பக்தி நெறியை வளர்க்க வேண்டும்

சைவ ஆலயங்களிலே மஹோற்சவங்களும், அலங்கார உற்சவங்களும் ஆரம்பித்துவிட்டன. கிராமங்கள் தோறும் கோயில்கொண்டிருக்கும் உற்சவ மூர்த்திகளுக்குப் பூசைவழிபாடு பக்தி சிரத்தையோடு மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மங்களகரமான இவ்விழாக்கள் பொதும் வரவேற்கப்படவேண்டியவைகளே அலைக்கழிந்து அல்லற்படும் மனித நெஞ்சங்களுக்கு ஆறுதலளிக்கவும். பக்தியை வளர்க்கவும் இவைகள் பெரிதும் உதவுகின்றன. ஆகவே அவைகள் முறையாக நடைபெற இறையருளும், மக்கள் முயற்சியும் ஒன்ருக இணையப் பிரார்த்திக்கின்ருேம்.

மக்களகரமான நாதஸ்வர, தவில் கச்சேரிகளையும், தரம் வாய்ந்த இன்னிசைக் கச்சேரிகளையும், பக்திநெறிவளர்க்கும் தெய்வீகப் பாடல்களையும் ஒருங்கே கேட்டின்புறக்கூடிய அரிய வாய்ப்புக்களை ஏற்படுத்த இவ்விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.

இவற்றுக்குப் பதிலாக அல்லது இவற்ருேடு கலந்து கீழ்த்தரமான சினிமாப் பாடல்களையும் கேட்டு அவதியுறவேண்டிய ஆபத்துக்களும் ஏற்படத்தான்போகின்றன. கடந்த கால அனுபவங்கள் இப்படியாக அச்சங்கொள்ளச் செய்கின்றன.

உற்சவங்களின் நல்ல நோக்கங்களைப் புறக்கணித்து, வெறும் ஆரவாரத்தையும் வீண் பொழுதுபோக்கையும் முன்வைத்து இவைகள் இவ்வாறு நடைபெறுகின்றன. பக்தியோடு கலை வளர்க்க வேண்டிய புனிதத் தலங்களுக்கு இப்படியானதொரு சாபக்கேடா? இதையுணர மறுக்கின்ற பொதுமக்களும், உபயகாரரும் நிறையவேயிருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களது மனமாற்றமும், பேராதரவும் கிடைத்துவிட்டால் ஆலயங்களின் நோக்கங்கள் நிறைவேறிவிடும், எல்லோருக்கும் நிம்மதி கிடைக்கும், இசையின்பமும் உயர்வானதாக அமையும்.

அருள்நேசன்

கோயில் வீதி,
நல்லூர்.

'ஒன்றுபட்ட போராட்டத்தின் வெற்றி'

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் சுருட்டுச்சுற்ற 50 ரூபா கூலி சட்டமாக்கப்படவிருப்பதாகவும் இக் கூலி உயர்வு கோரிக்கை வெற்றி பெறுவதற்கு தொழிலாளரின் ஒன்றுபட்ட போராட்டமே காரணமென்றும் அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய வாழ்க்கைச் செலவு நிலையில் சுருட்டு முதலாளிகளும் தொழிலாளருக்கு 1000 சுருட்டுக்கு 50 ரூபா கூலியை மனப்பூர்வமாக வழங்குவார்களென்றே தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (கொ-அ)

மட்டுநகர் கல்வித் திணைக்களம்

ஆசிரியர்களிடம் தொழில் வங்கி விண்ணப்பம் கேட்கிறது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தவருடம் மார்ச் மாதத்திற்கு பின்பு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களிடம்தொழில் வங்கி விண்ணப்ப படிவங்கள் கேட்கப்பட்டுள்ளது

தொழில்வங்கி யூடாக மனம் பெறுமல் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சில் நியமனம்பெற்றவர்கள் இதனால் பதட்டமடைந்துள்ளனர்.

ஆனால் தற்போது இவ் ஆசிரியர்களிடம் தொழில் வங்கி இலக்கமும் நியமனம் தொழில் வங்கிமூலம் வழங்கப்பட்டதா என்பதை உடனடியாக அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சில ஆசிரியர்கள் தொழில் வங்கி படிவம் சம்பந்தமாய் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஆலோசனையை பெறுகிறார்கள். பலருக்கு தொழில் வங்கி படிவம் இருப்பதால் அவர்களிடம் படிவங்களின் இலக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி சில ஆசிரியர்கள் நியமனம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் வேறு, ஆனால் அவரிடம் இருப்பது வேறு பாராளுமன்ற உறுப்பினரின் படிவமாகும். இதனால் இவர்கள் பதட்டம் அடைந்த நிலையிலுள்ளார்கள்.

புதிய உபதபாலகம்

(மாவிட்டபுரம்)

அளவெட்டி கணேஸ்வர பகுதியில் புதிய உபதபால் நிலையமொன்று நிறுவப்படவுள்ளது

தொகுதிக்கு ஒரு உபதபால் நிலையத்தை நிறுவும் அரசின் திட்டத்தின் கீழ் காங்கேசன் துறைத் தொகுதியில் இந் நிலையத்தை எங்கு நிறுவலாம் என தபால் அமைச்சு காங்கேசன்துறை எம். பி திரு அமிர்தலிங்கத்திடம் கோரியிருந்ததையடுத்தே அவர் அளவெட்டி கணேஸ்வரத்தில் இந் நிலையத்தை நிறுவுமாறுசிபார்சு செய்துள்ளார். (கு)

கடற்றொழில் சங்கம்

(சாவகச்சேரி)

கடற்தொழில் விரிவாக்க சேவைசங்கம் ஒன்று சாவகச்சேரி கடற்தொழில் பரிசோதகர் சு. கதிரித்தம்பி தலைமையில் தனங்கிளப்பில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கீழ்க்காண்போர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் சி. பொன்னுத்துரை, உபதலைவர் எஸ். முத்துக்குமாரு, செயலானர் வி. சதானந்தன், உபசெயல்லாளர் வே. நாகராசா, தனதிகாரி சி. இரத்தினம். [கு]

'தேசிய இனங்களிடையே ஐக்கியம்வளரவேண்டும்'

(அரியாலை)

ஐக்கியம் என்பது நாடுகளுக்கிடையே மட்டுமன்றி ஒரு நாட்டுக்குள் இருக்கும் தேசிய இனங்களிடையேயும் இருக்க வேண்டும். இந்த ஐக்கியம் வெவ்வேறு மதங்களிடமும், கிராம மக்களிடமும் பாடசாலைகளுக்கிடையே மட்டுமல்ல மாணவர்களுக்கிடையேயும் இருக்கவேண்டும்.

இவ்வாறு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்ற பொதுநல அமைப்பு நாடுகள் தினவிழாவில் ஆசிரியர் கு. பாலசுப்பிரமணிய ஐயர் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. பாலசுப்பிரமணிய ஐயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- எங்கெங்கு ஐக்கியம் நிலவுகிறதோ? அங்கு தான் அபிவிருத்தியும் சுபீட்சமும் உண்டாகும் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் ஆசிரியர்கள் தாம் தொழில் புரியும் பாடசாலையின் அபிவிருத்தியிலும், மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்படவேண்டும். இதன் மூலமே பாடசாலை வளர்ச்சியடையும்.

ஆசிரியர் திரு. அ. பூபாலசிங்கம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (க)

உணவுமுத்திரைவிநியோகம் மக்கள் படும் கஷ்டங்கள்

இண்டுகொத்து அரிசி வழங்குவோம் என்று உறுதியளித்து ஆட்சிக்கு வந்தது முன்னைய அரசாங்கம். ஆனுல் பதவியைக்கைப்பற்றிக்கொண்டதும் கொடுத்தவாக்குறுதிகளை மறந்து அத்தியாவசிய தேவைப்பொருட்களின் விலைகளை அதிகரித்தது. அந்த அரசினுல் அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலைகளைக் குறைப்போம் என்றும் எட்டு ருத்தல் தானியங்கள் வழங்குவோம் என்றும் வாக்குறுதியளித்ததனுல் தற்போதைய அரசாங்கத்தைப் பதவியிலமர்த்தினுர்கள் அப்பாவிப்பொது மக்கள்.

ஏழைமக்களுக்கிருந்த சுமையைக் குறைப்போம் என்றவர்கள் மாருக மேலும் சுமைகளையே ஏற்படுத்திவிட்டார்கள்.

அத்தியாவசிய தேவைப் பொருட்களான மா, சீனி, பாண் போன்றவற்றிற்கு வழங்கிவந்த மானியத்தை நிறுத்தி அவற்றின்மூலம் நாட்டின்அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவுசெய்துள்ளது. மகாவலிபோன்ற திட்டங்களினுல்நாடுமுன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனுல் அந்தத் திட்டங்களினுல் நாடு பயனடையும்வரை, விலைவாசிஅதிகரிப்பால்ஏற்பட்டுள்ளசுமையை மக்களால் தாங்கிக்கொள்ள முடியுமா என்பதுதான் சந்தேகம்.

ஐக்கியதேசியக் கட்சியின் அன்றைய தலைவர்களின்ஒருவரான காலஞ்சென்ற டட்லி சேனநாயக்காவினுல் மக்களுக்கு இலவசஅரிசி வழங்கப்பட்டது. அதற்கென வழங்கப்பட்டுவந்த கூப்பன் முறையை மாற்றியமைத்த இன்றைய அரசு இலவச உணவு முத்திரைத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. [illegible] பெறுவதற்குரிய ஏழ்மையின் எல்லைக்கோடாக முந்நூறு ரூபா எனவும் தீர்மானித்தது.

முந்நூறு ரூபாவுக்கும் குறைவாக மாதவருமானமுள்ள குடும்பங்களுக்கு உணவுமுத்திரை வழங்குவதென்ற முடிவின் பின்னர் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துவிட்டன' ஆனுல் முத்திரைகளைப் பெறுவதற்கான வருமான [illegible] எல்லை அப்படியேதானிருக்கிறது.அதேபோன்றேஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் முத்திரைகளின் பெறுமதியும் அதிகரிக்கப்படவில்லை.

குழந்தையொன்றுக்கு வழங்கப்பட்ட முத்திரையின் பெறுமதி இருபத்தைந்து ரூபாவாகும் இவற்றை முதலில்வழங்கியபோது லக்ஸ்பிறே ருத்தல் ஒன்று ஆறுரூபாவாக இருந்தது. ஆனுல் இன்ருே அதன் விலை மூன்றுமடங்காக அதிகரிக்கப்பட்ட பின்னரும் குழந்தைக்கு இருபத்தைந்துரூபா பெறுமதியான முத்திரையே வழங்கப்பட்டுவருகிறது. இது போலவே ஒரு ருத்தல் மா ஒரு ரூபாவாக இருந்தபோது வழங்கப்பட்ட அதேஅளவு பெறுமதியான முத்திரையே தற்போது மா இரண்டுரூபாமுப்பத்தேழு சதமாக விற்கப்படுகின்ற போதும் வழங்கப்படுகின்றது.

எஸ். குகநாதன்

அதிகரிக்கப்படுகின்ற விலை ஏற்றத்தைக்கருத்தில்கொண்டு உணவுமுத்திரைகள் பெறுவதற்கான வருமான எல்லை அதிகரிக்கப்படவேண்டிய அதே வேளையில் வழங்கப்படும் முத்திரையின் பெறுமதியும் அதிகரிக்கப்படவேண்டும்.

இதேவேளையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள மூன்ரும் கட்ட உணவுமுத்திரைவிநியோகம் சீராக நடைபெறவில்லை [illegible] பான்மைத் தமிழர்களுக்கு அநீதியான முறையில் அவை ரத்துச்செய்யப்பட்டு விட்டது என்று யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடமே முறையிடப்பட்டுள்ளது.

தவருன வருமானங்களைக் காட்டி சிலர் முத்திரைகளைப் பெற்றிருப்பதும் உண்மையாக இருக்கலாம். ஆனுல் அவை பற்றித்தெரியவரும்போது சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணைசெய்தபின்னரேஅவற்றை ரத்துச்செய்யவேண்டும். ரத்துச்செய்துவிட்டு விசாரணை நடத்துவது முறையல்ல. முத்திரைபெறத் தகுதியானவர்களுக்கும் அவற்றை ரத்துச்செய்துவிட்டு பின்னர் விசாரணை நடத்திக்கொண்டிருப்பதால் அந்த அப்பாவி மக்கள் மிகுந்த சிரமமடைந்துவருகின்றனர்.

ஐந்துபிள்ளைகளின் தந்தையொருவர் கடையொன்றில் சிற்பந்தியாகப் பணியாற்றினுல், அவருக்கு உணவும் வழங்கி நூற்றிஐம்பதோ இருநூருே சம்பளமாக வழங்குவார்கள். அதனையே தன் குடும்பத்தின்மிகுதி நால்வருக்கும் பயன்படுத்துவார். ஆனுல் அவர்களின்குடும்ப வருமானமோ அத்தந்தையின் உணவுக்கு கடைஉரிமையாளர் கொடுக்கும் தொகையுமே சேர்த்துக் கணக்கெடுக்கப்படுகிறது. இதனுல் அந்தக் குடும்பத்துக்குஉணவுமுத்திரைவழங்கப்படுவதில்லை இதனுல் அக்குடும்பம் பட்டினியின் எல்லைக்கோட்டையும் தாண்டிவிடுகிறது.

சிறுதோட்ட விவசாயி ஒருவருக்கு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் அவர்களுடைய தோட்டங்களில் கூலிவேலைசெய்யும் ஒரு சாதாரண தொழிலாளரின் குடும்பத்துக்குஉணவுமுத்திரை வழங்கப்படாமலிருப்பதையும் சிலகிராமங்களில் காணக்கூடியதாகவுள்ளது. எனவே உணவு முத்திரைகள் எந்த நோக்கத்துடன் எவர்களுக்கென வழங்கப்பட்டதோ அவை அவர்களிடம் சென்றடையவேண்டும்.

தவக்கால நற்சிந்தனை

முள்முடி!

இயேசு பிடிபட்டபின் யூதர்களினுலும், சேவகர்களினுலும் அனுபவித்த வேதனைகள், துன்பங்கள் எத்தனை?எத்தனை? அவர் தாம் அரசர் என்று சொல்லியதாகக் கேள்விப்பட்டிருந்தனர் எனவே அரச போர்வையாக கிழிந்த துணியை அவர்மேல் போட்டார்கள். அரச கிரீடமாக முட்களை முடியாகப்பின்னி அவர் தலையில் வைத்து அடித்தார்கள். இரத்தம் வடிந்து முகத்தையும் நனைத்து "யூதருடைய அரசரே வாழ்க" என்று பரிகாசம் செய்தனர்.

இத்தனை துன்பங்களில் இயேசு தாழ்மையாக, மௌனமாகச் சகித்துக்கொண்டிருந்ததின் காரணம் எம்மேல் கொண்ட அன்பே! ஆனுல் நாமோ இயேசுவின் துயரங்களை மனத்தில் சிந்தித்து வருந்திச் செல்கிருேம். ஆனுல் இத்தகைய துன்பங்களுக்கு காரணங்களாக விளங்கும் நினைவினுல் செய்தகுற்றங்கள், பிறர்மீது அன்பற்ற சிந்தனைகள், பகை, பொருமை நினைவுகளை வெறுத்து இயேசுகாட்டிய வழியில் வாழ எத்தனிப்போம்.

ஆண்டவரே நீர் உண்மையாகவே என் அரசர். என்னை முழுவதும், எனது மனதை, எனது உடலை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

--வண. மேரி பஸ்ரியன்

பொங்கல் விழா

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவில் பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை முதல் புதன் அதிகாலை வரை நடைபெறவுள்ளது சமய விரிவுரை நடைபெற ஏற்பாடாகவுள்ளது. (கு)

''காங்கேசன் தொழிற்சாலைக்கு தமது காணிகளைக்கொடுத்துவிட்டு

எமது மக்கள் தொழிலின்றிக் கஷ்டமுற தென்னிலங்கையர்க்கு இங்கு நியமனம்''

எதிர்க்கட்சித் தலைவர் கவலை

(மாவிட்டபுரம்)

''காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் 3-வது சூளையும் அமைக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் எமது மக்கள் தொழிற்சாலை விஸ்தரிப்புக்காக தமது காணிகளை கொடுத்துவிட்டு விவசாயம் செய்யமுடியாமலும் தொழில் இல்லாமலும் கஷ்டமுறுகிறார்கள். ஆனால் எமது மக்களுக்கு தொழில்வாய்ப்புக்கிடைக்காத போது தென்னிலங்கையிலிருந்து இத்தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் கொண்டு வந்து குவிக்கப்படுவது அநீதியானது''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் அளவெட்டி கணேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. பொன்னம்பலம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

இன்று நமது நாட்டைப் பெரியதோர் பொருளாதாரப் பிரச்னை எதிர்நோக்கியுள்ளது.

650 ரூபாவுக்கு விதை வெங்காயத்தை வாங்கி உரம், கிருமிநாசினிகளுக்கும் பணத்தைச் செலவிட்டு வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் இன்று 200 ரூபாவுக்கு விற்கவேண்டிய நிலையில் உள்ளனர். மாதாந்தம் சம்பளம் பெறுவோர் 100 ரூபா பெற்றால் அது 25 ரூபாவுக்கே சமமானதாக உள்ளது. வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் சகல மக்களும் இன்று [illegible] ள்ளாகிறார்கள்.

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் ஒரு சில குடும்பங்களது சுபீட்சத்திற்கு வழிவகுத்து ஏனைய மக்கள் ஏழைகளாக மாறியுள்ளது

நாம் எம்மைக் காப்பாற்ற எமது பகுதிகளில் அத்தியாவசிய பொருட்களை தன்னிறைவடையச் செய்யவேண்டும்

''நாம் யாருக்கும் விரோதமானவர்களல்ல. எமது மக்களது சுதந்திரத்திற்கும், சுபீட்சத்திற்கும் வழிவகுப்பதற்காக நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். மற்றவர்களைப் போல நாமும் வாழ நினைப்பதில் தவறில்லை. எமக்கு எதிராக அநீதி இழைக்கப்படும்போது அதை எதிர்த்து வாதாடுவோம். நீதியை நிலைநாட்ட முயற்சிப்போம்.''

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகதேவா உட்பட பலர் பேசினர். (கு)

அமைச்சர் முகமதுவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

(மன்னார்)

மன்னாரில் புதிய பஸ் நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைக்க அண்மையில் மன்னாருக்கு வந்திருந்தபோக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது நொச்சிகுளத்திற்கும் விஜயம் செய்திருந்தார்.

அமைச்சர் நானாட்டானுக்கு வந்ததும் அங்குபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. அதன் பின்னர் அமைச்சர், நானாட்டானில் இருந்து நொச்சிக்குளம்வரை பொதுமக்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

நொச்சிகுளத்திற்கு விஜயம் செய்த போக்குவரத்து அமைச்சர் ஜனாப். எம். எச். முகமது, நொச்சிகுளத்திற்கருகில், உள்ள கிராமம் ஒன்றுக்கும் விஜயம் செய்தபோது அமைச்சர் அதிர்ச்சியடைந்தார்! ஏனெனில், அக்கிராமத்திற்கு ஒருபெயர் கூட இல்லை அக்கிராமத்தில் 22 முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்துவருகின்றன. அக்கிராமத்திலும் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அக்கிராமத்தில் ஹிஜ்ரா வித்தியாலயம் ஒன்றை அமைச்சர் திறந்துவைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் ''இவ்வித்தியாலயத்திற்கு 35 ஆயிரம்ரூபா வழங்கப்படும். இதுபற்றி ஹிஜ்ரா குழுவினர் பரிசீலனை நடத்துவார்கள். இக் கிராமத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் அயல் கிராமத்தவர்களோடுஇணைந்து மகிழ்ச்சியுடன் வாழவேண்டும். இக்கிராமத்து மக்களால் வீடுகள் கட்டித்தரும்படி கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. நான் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு சுயவீடமைப்புத் திட்டத்தின்கீழ் 10 அல்லது 15 வீடுகளை இக்கிராமத்தில் அமைக்க நடவடிக்கை எடுப்பேன். இங்கு அமைக்கப்பட்டுள்ள ஹிஜ்ரா வித்தியாலயத்திற்கு 50 திருக்குர் ஆன் பிரதிகளையும் ஒரு தமிழ்மொழி பெயர்ப்புப் பிரதியையும் விரைவில் அனுப்பிவைப்பேன்'' என்று கூறினார்.

ஹிஜ்ரா வித்தியாலயத்தில் அனுமதிக்கப்பட்ட முதல் மாணவனுக்கு அல்ஹாஜ் ஏ எம். சாஹுல் ஹமீது அரபுப் பாடத்தைச் சொல்லிக் கொடுத்து கல்வியை ஆரம்பித்துவைத்தார்.

இக்கிராமத்தில் நடைபெற்ற ஹிஜ்ரா வித்தியாலயத் திறப்பு விழாவில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப். எம். எச். முகமதுவுடன், மூதூர் எம். பி. யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ்பெனாண்டோ உட்பட பல அதிகாரிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார்பஸ்நிலையஇடத்துக்கு உதவிய வர்த்தகர்கள்

(மன்னார்)

''மன்னாரில் புதிய பஸ் நிலையம் அமையவுள்ள இந்த இடத்தை 4818 டிராக்டர் மண் கொண்டு நிரவியுள்ளோம். இதற்கான செலவு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவாகும்.''

இவ்வாறு மன்னார் புதிய பஸ்நிலையத்திற்கான அடிக்கல்லை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது நாட்டி வைத்து விழாவில் வர்த்தகர் சார்பில் உரையாற்றிய ஜனாப் அப்துல் காதர் கூறினார். இவ்விழா மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ எச் மஹ்றூப் தலைமையில் நடைபெற்றது.

ஜனாப் அப்துல்காதர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இப்புதிய பஸ் நிலையத்தை வர்த்தக ஸ்தாபனங்களுக்கு அருகாமையில் அமைக்கவேண்டும். அப்போதுதான் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும்'' என்று கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மன்னாருக்கு வருகை செய்த போக்குவரத்து அமைச்சரிடமும், மாவட்ட அமைச்சரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த வேண்டுகோளை ஏற்ற போக்குவரத்து அமைச்சரும், மாவட்ட அமைச்சரும் கால்நடையாக வந்து இந்த இடத்தை பார்வையிட்டு தெரிவு செய்தனர். 8 அடி ஆழமான இந்தக் குளத்தை நிறுவித் தந்தால் இந்த இடத்தில் பஸ் நிலையம் அமைத்துத் தருவதாக அமைச்சர் சொன்னார். 8 அடி ஆழமான இந்தக் குளத்தை எப்படி நிரப்புவது என்று பலர் சந்தேகப்பட்டனர். இந்தக் குளத்தை நிரப்ப 2000 டிராக்டர் மண் காணும் என்று பலர் கூறினர். ஆனால் இந்தக் குளத்தை நிரப்ப 4818 டிராக்டர் மண் போடப்பட்டுள்ளது. வர்த்தகர் சங்கம் இந்தச் செலவை ஏற்று குளத்தை மண் போட்டு நிரவியது'' என்று கூறினார்.

சுருட்டுத் தொழிலாளருக்கு

50 ரூபா சம்பளம் சட்டமாக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் சுருட்டுச் சுற்றுவதற்கு 50 ரூபா சம்பளம் வழங்கவேண்டுமென இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கங்கள் விடுத்த கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டு சம்பள நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ் தொழிற் கந்தோரில் நடைபெற்ற கூட்டத்திலேயே 50 ரூபா சம்பளம் உறுதிப்படுத்தப்பட்டது.

சம்பள நிர்ணய சபையின் பதில் ஆணையாளர் திரு. ஜி. வீரக்கோன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொழிற்சங்க சார்பில் இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்க தலைவர் திரு. மா. க. முதலியார், அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம், திரு. செ. தம்பிராசா, திரு. க. தங்கராசா ஆகியோரும உற்பத்தியாளர் சங்கச் சார்பில் திரு. எஸ் ஏ. ரி. வடிவேலு, திரு. எம். எஸ். கே. முத்துலிங்கம்' திரு. வி. கே. இராசலிங்கம் ஆகியோரும் நியமன அங்கத்தவர் சார்பில் திரு. பொ. நவரத்தினம், திரு. மு. மதியாபரணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. முதலியார் கூட்டத்திற்கு வந்தோருக்கு நன்றி தெரிவிக்கையில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துக்கொண்டு போகும் இவ்வேளையில் இந்தக்கூலி உயர்வு தொழிலாளருக்கு போதாது என்றே சொல்லவேண்டும் என்றார்.

இந்தச் சம்பளஉயர்வு அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும். (கொ)

'மக்களுக்காக வாழ்ந்தார்'

(யாழ்ப்பாணம்)

1951 ம் ஆண்டு யாழ் பா நகரசபை உறுப்பினர் ஆகிய காலம்தொட்டு 1956ம் ஆண்டு செனட்டராக இருந்த காலம் வரை அமரர் நல்லையா மக்களுக்கும் எமது நிலையத்திற்கும் பெரும் தொண்டாற்றினார்''

யாழ்ப்பாணம் மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலைய செயலாளர் திரு. க. கிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''மக்கள் சேவையே மகேசன் சேவையென்று தன்னலமற்று தமது வாழ்நாள் அனைத்தும் மக்களுக்காக அயராது உழைத்தார். பொன் பொருளை தேடாது சிறுபான்மை தமிழ் மக்களுக்காக தன்வாழ்வை அர்ப்பணித்தார். (க)

……

ஹிஜ்ரி பாடசாலை

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் சுயமுயற்சித்திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட ஹிஜ்ரி ஞாபகார்த்த பாடசாலைக் கட்டிடத்தை போக்குவரத்து அமைச்சர் ஜனாப். எம். எச். முகமது திறந்து வைத்தார்,

இவ்வைபவத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பொனாண்டோ, மூதூர் எம். பி யும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். [illegible] அதிகாரிகளும் [illegible] கலந்து கொண்டனர்.

ஆறுநாட்கள்

[சுழிபுரம்]

புத்தூர் தபால் நிலையத்திலிருந்து சுழிபுரத்திலுள்ள திரு. க. வாமதேவனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா இருபது கொண்ட மணியோடர் மாற்றிப் பெறுவதற்கு ஆறுநாள் எடுத்துள்ளது.

திரு எஸ் நல்லதம்பி என்பவர் அனுப்பிய மணியோடரை பண்ணாகம் உபதபால் நிலையத்தில் மாற்றுவதற்கு கடந்த 15ம் திகதி முதல் தினமும் மணியோடருடன் சென்றபோது பிரதிக் கோப்பி வராததால் பணத்தைப்பெறமுடியவில்லையாம் ஆறுநாட்களின் பின்னரே பெறமுடிந்தது.

[ஏ]

தமிழாராய்ச்சி மாநாடு மீண்டும் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

5வது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4ம் திகதி முதல் 10ம் திகதிவரை மதுரையில் நடைபெறும்.

இதனை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அறிவித்துள்ளது.

இவ்வாண்டு ஜூன் மாதம் நடைபெற இருந்த இம்மகாநாடு, தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் நடைபெற இருப்பதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [இ]

……

இசிப்பத்தான- சென். ஜோன்ஸ் கிரிக்கட் மோதல்

[அரியாலை]

இம்மாத இறுதியில் யாழ் வரும் கொழும்பு இசிப்பத்தான மத்திய மகா வித்தியாலய கிரிக்கட்குழு இம்மாதம் 31ம் திகதி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியுடன் மேற்படி கல்லூரியில் மோதும். சென் ஜோன்ஸ் மைதானத்தில் இவ்வாட்டம் நடைபெறும். [illegible]

……

இன்று குளிர்த்தி திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்தநயினார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மாரியம்மனுக்கு இன்று பகல் பத்து மணிமுதல் நவோத்ர சதசங்காபிஷேகம், விசேஷபூஜை நடைபெற்று பொங்கல், கஞ்சி காய்ச்சி படையல்போட்டு அம்பாள் வீதிவலம்வருவார். தொடர்ந்து அன்னதானம் நடைபெறும்.

மதுபோதையில் வந்தவர் கிருமிநாசினியை அருந்தினார்

(புலோலி)

மதுபோதையில் வீட்டிற்கு வந்தவர், தோட்டப் பாவனைக்குவைத்திருந்த கிருமிநாசினியை அருந்தி மரணமான சம்பவமொன்று பருத்தித்துறை சுப்பர் மடத்தில் இடம் பெற்றுள்ளது.

வைத்திலிங்கம் விநாயகம் (வயது 69) என்பவரே மதுபோதையில் கிருமிநாசினியருந்தியதனால்இறந்தவராவார். இவரது மரணம் சம்பந்தமான விசாரணையை வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திருஞானசம்பந்தர் வேலுப்பிள்ளை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் பியசேன சாட்சியங்களை ஆஜர்செய்தார்.

இறந்தவரது மகன் இராசேந்திரம், பிரேதபரிசோதனையை மேற்கொண்ட டாக்டர் கலைவாணி உக்கிரப் பெருவழுதிப் பிள்ளை சாட்சியத்தையடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கு)

அனுமதியின்றி கள் இறக்கினால் நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக்கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் சங்கத்தின் அனுமதியின்றி பதநீர், கள் என்பன

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கொல்லங்கலட்டியில் மற்றுமொரு திருட்டு:

திருட்டுக் கோஷ்டியொன்று ஈடுபட்டு வருகிறதா?

(மாவிட்டபுரம்)

வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையிலிருந்த சமயம் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த நகை, பொருட்களைத் திருடிச் சென்றுவிட்டனராம்.

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியில் இடம்பெற்ற இத்திருட்டில் 12 பவுண் தாலிக்கொடி, சைக்கிள் உட்பட மேலும் சில பொருட்கள் திருட்டுப்போயுள்ளன. அவ்விடத்தைச் சேர்ந்த மூத்த தம்பி சரவணமுத்து என்பவரது வீட்டிலேலே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது

வீட்டுக்காரர் எல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருக்க வீட்டினுள் புகுந்த திருடர்கள் 27 ஆயிரத்து 00 ரூபா பெறுமதியான இப்பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லங்கலட்டியில் அண்மையிலும் ஒரு வீட்டினுள் புகுந்த திருடர்கள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியிருந்தனர். மாவிட்டபுரத்திலிருந்து கொல்லங்கலட்டி நோக்கிச் சென்ற பெண்மணியொருவரின் தாலிக்கொடியும் அண்மையில் இனந்தெரியாதவர்களால் அறுத்துச் செல்லப்பட்டது

அடுத்தடுத்து இடம் பெறும் இத்திருட்டுகளில் ஒரு கோஷ்டியினர் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது காங்கேசன்துறைப் பொலிசார் திவிர விசாரணை செய்துவருகின்றனர். (கு)

பொருட்காட்சியின் அவசியம்

(யாழ்ப்பாணம்)

"வசதிபடைத்தவர்களுக்கு அல்லது புத்திக்கூர்மையுடையவர்களுக்குமட்டுமே கல்வி என்ற நிலை மாறி எல்லோருக்குமே கல்வி என்ற இலட்சியத்தை இப்போது கொண்டுள்ளோம. இவ்வுயர்ந்த இலட்சியத்தை இலகுவில் அடைவதற்காகவே ஒன்றிணைந்த கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குழலுக்கு ஏற்றவாறு கணிதம், தமிழ், பேச்சு, வாசிப்புப் போன்றவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் படிப்பிப்பதால் அவை குழந்தையின் மனதில் இலகுவாகவும் ஆழமாகவும் பதிகின்றன. இத்திட்டத்தை ஒவ்வொரு பாடசாலையும் எவ்வாறு செயற்படுத்துகின்றது என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் மாணவர்களின் செயற்பாடுகளைப் பெற்றோர் அறிந்துகொள்வதற்காகவும் இத்தகைய பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன."

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு சி. இராசநாயகம் குறிப்பிட்டார்

வித்தியாலய அதிபர் திரு. சி சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பேசிய ஆசிரிய ஆலோசகர் திரு. நாகராசா கூறியதாவது:- "இரண்டு அல்லது மூன்று மணி நேர நாடகத்தில் அறுபது ஆண்டுகால வாழ்க்கைச் சம்பவங்களைக்கூட நன்கு பிரதிபலிக்க முடிகின்றது. அதேபோல, மாதக்கணக்காக, ஆண்டுக்கணக்காக மாணவர்கள் அடைந்த முன்னேற்றத்தை, ஈட்டிய சாதனைகளை இத்தகைய பொருட்காட்சிகள்மூலம் நாம் நன்கு மதிப்பிடலாம்."

ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், நெசவு, சித்திரம், தையல், சமூகக் கல்வி, விவசாயம் ஆகிய பல்வேறு பிரிவுகளில் மாணவர்கள் ஆக்கிய காட்சிப் பொருட்களைப் பெருந்தொகையான பெற்றோர்களும் பார்வையிட்டனர். உப அதிபர் திரு. குலசிங்கம் நன்றி கூறினார். ((க)

……

அனுமதியின்றி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இறக்கும் சீவல் தொழிலாளர்கள் மீதும், இலக்கமிடப்படாமல் சீவஅனுமதியளிக்கும் காணிச்சொந்தக்காரர் மீதும் சட்டவடிக்கை எடுக்கப்படுமென சங்க பொதுமுகாமையாளர் திரு வீ. கே. மாணிக்கம் அறிவித்துள்ளார்.

இதனைக்கண்காணிக்க திரு. என். கணேசமூர்த்தி தலைமையிலான பத்து பேரடங்கிய குழுவொன்று அறிவித்துள்ளார் (கு)

கல்வித்துறைக்கு நஷ்டம்

(உடுப்பிட்டி)

ஆசிரியர்கள் தெய்வத்திற்கு சமமானவர்கள். இதனாலேயே எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்று எம் முன்னோர் கூறியுள்ளனர். இத்தகைய ஆசிரியர்களில் ஒருவரான திரு.செல்லத்துரை கல்வியுலகில் தூயபணியாற்றிக் கொண்டு இருக்கும்வேளையில் அமரரானது கல்வித்துறைக்கு மட்டுமல்லாது எமது கல்லூரிக்கும் பேரிழப்பாகும்.'

இவ்வாறு கரவெட்டி திருஇருதயக்கல்லூரி ஆசிரியர் திரு. கே. செல்லத்துரையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நடாத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் இப்பன் குறிப்பிட்டார்.

……

சனிக்கிழமைகளில் பாடசாலை நடத்த முடியாது

(மட்டக்களப்பு)

"சனிக்கிழமைகளில் பதில் பாடசாலைகளை இனிமேல் நடத்தக்கூடாது" என்று வட்டாரக்கல்வி அதிகாரிகள் பாடசாலை அதிபர்கட்கு உத்தரவிட்டுள்ளனர்.

பாடசாலை நாட்களில் சில பாடசாலைகள் அவசிய காரணத்திற்காக மூடப்படுகின்றன. இதற்கு பதில் பாடசாலைகள் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டுவந்தன. இனிமேல் பாடசாலை மூடப்பட்டமைக்கு பதில் பாடசாலை நடத்துவதாயின் சனிக்கிழமைகளில் நடத்தாமல் தவணை விடுமுறை நாட்களில் நடத்தவேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (கு)

……

சேவை நீடிப்பு: ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை

(மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உதவி ஆசிரியர்கள் 60 வயது வரை சேவை நீடிப்பு பெற விரும்பினால் அவர்கள் மாவட்டத்திற்கு வெளியே உள்ள கஷ்டப்பிரதேசங்களில் கடமை புரிய வேண்டும் என்ற சுற்றுநிருபம் வந்துள்ளமையால் இப்பகுதியில் இருந்து சேவைநீடிப்பு பெற பெரும்பாலான ஆசிரியர்கள் இம்முறை விண்ணப்பம் செய்யவில்லை,

இப்பகுதி உதவி ஆசிரியர்களுக்கு பொலநறுவ, ஊர்காவற்றுறை, மன்னார், வவனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, பண்டாரவளை, மொனறாகலை என்பன கஷ்டப்பிரதேசங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (கு)

தாலிக்கொடி கொள்ளைவழக்கு:

சந்தேகநபரின்றி விசாரணை நடக்கும்

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடி கொள்ளை வழக்கில் சந்தேக நபர்களில் இருவர் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதால் சந்தேக நபர்கள் இல்லாமலேயே விசாரணை நடைபெறவிருக்கிறது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த பெண் ஒருவரின் தாலிக்கொடியை கொள்ளையடித்ததாக மூவருக்கு எதிராக யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களில் இருவர் வேறொரு வழக்கிற்காக கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு கொண்டுசென்றபோது அவர்கள் இருவரும் தப்பி ஓடிவிட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதை அடுத்து நீதிபதி இவ்வழக்கை மே மாதம் 9-ந் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். அன்றைய தினம் சந்தேக நபர்களில் இருவர் இல்லாவிட்டாலும் வழக்கை நடத்துவதென நீதிபதி பணித்துள்ளார்.

இவ்வழக்கில் சென்ற வருடம் யூன் மாதம் 30-ந் திகதி வட்டக்கச்சியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளையிடமிருந்து அவருக்குச் சொந்தான 4735 ரூபா பெறுமதியான தங்கத் தாலிக்கொடியை கொள்ளையடித்துச் சென்றதாக சுந்தரம் தேவநாயகம் அல்லது குஞ்சன் தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை அல்லது கணபதி, கந்தையா குணரத்தினம் அல்லது குணம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (கோ)

சிற்றூழியர்களைக் ண்டிக்க குழுநியமிக்க வேண்டும்

யாழ். மாநகரசபைக்குவரும் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைசிற்றூழியர்களை கண்காணிப்பதற்கு அங்கத்தவர் குழுவொன்றை தெரிவு செய்யவேண்டும் என்ற பிரேரணையொன்றை இம்மாதம் 28ம் தேதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ். முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. யோ. அ செல்வநாயகம் கொண்டுவரவிருக்கும் அப்பிரேரணை விபரம் வருமாறு: இச்சபையின் சிற்றூழியர்கள் வேலைக்கு வராமல், சம்பளமெடுப்பதும், வேலை நேரத்தில் உரிய இடத்தில் இல்லாமல் ஒரு நாளில் முடிக்க வேண்டிய வேலையை பலநாள் செய்வதாலும், வரியிறுப்பாளரின் பணம்வீண்விரயமாகிறது, இதைத் தடுப்பதற்குகொழும்பு மாநகரசபையில் நடைபெறுவதுபோல்வேலை நடைபெறும் இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதற்கு அங்கத்தவர் கொண்ட குழுவொன்றை அமைக்க வேண்டுமென இச்சபை கோருகிறது.

பதவி உயர்வு

(சாவகச்சேரி)

மிருசுவில் புகையிரத நிலைய டிக்கட் ஏஜண்டான திரு எஸ் ஜே. செல்வநாயகம் உப புகையிரதநிலைய அதிபராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார். (க)

ரூ.$5\frac{1}{2}$ லட்சம் செலவில் மன்னாரில் பஸ் டிப்போ

3 வாரத்தில் 5 பஸ்களும் வரும்

[மன்னார்]

மன்னாருக்கு ஏப்ரல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் மேலும் 5 புதிய பஸ் வண்டிகள் அனுப்பப்படும். அத்துடன் இரண்டு மாதத்திற்குள் கொழும்பு-தலைமன்னார் மேலதிக கடுகதி புகையிரத சேவையும் நடத்தப்படும்.

இவ்வாறு மன்னாரில் நவீன பஸ் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது பேசுகையில் கூறினார்.

அடிக்கல் நாட்டு விழாவில் போக்கு வரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மதுவுடன் மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். எச். ஈ. மஹ்றூப், மட்டக்களப்பு 2-வது எம். பி. எம். எல்' அகமட் பரீத், மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ, வட பிராந்திய போக்குவரத்துத் தலைவர் திரு. டட்லி குணசேகரா உட்பட இ. போ. ச. அதிபர்களும் மற்றும் ஊழியர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நாட்டு வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- மன்னார் மாவட்டத்திற்கு 34 பஸ் வண்டிகள் தேவை. தற்போது 30 பஸ் வண்டிகளே உள்ளன. மேலும் 5 புதிய பஸ் வண்டிகள் அனுப்பிவைக்கப்பட்டதும் மன்னார் போக்குவரத்து பெரும்பாலும் சீரடைந்துவிடும். மேலதிக 5 பஸ் வண்டிகளும் ஏப்ரல் மாதம் 15 ம் திகதிக்கு முன் சேவையில் ஈடுபடும் அத்துடன் கொழும்பு - தலைமன்னார் மேலதிக கடுகதி ரயில் சேவையும் இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்

பஸ் சேவை சீராக நடைபெற பஸ் சாலையொன்று அவசியம் தேவை. மன்னாரில் சகல வசதிகளுடனும் கூடிய பஸ் சாலையொன்று விரைவில் அமைக்கப்படும். இதற்கான பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. நவீன பஸ் சாலையொன் அமைக்கப்பட்டதும் மன்னார் மாவட்ட பஸ்சேவை சீரடையும்.

இப்போது அடிக்கல் நாட்டியுள்ள பஸ் நிலையம் அமைக்கப்பட்டதும் ஒரே நேரத்தில் 14 இடங்களுக்குச் செல்லக்கூடிய 14 பஸ் வண்டிகள் நிறுத்தமுடியும். இந்த பஸ் நிலையத்தை அமைக்க ஐந்தரைலட்சம்ரூபா செலவாகும் ஐ தே.கட்சிஅரசாங்கம்சாதிமதபேதம்பாராது சேவை செய்து வருகிறது. பாகுபாடின்றி சேவை செய்வதே அரசின் நோக்கம்.

தரபேதம் இந்நாட்டில் இல்லை.

"இந்த நாட்டுமக்களுக்கு உரிமை அவசியம். 2-ம் தர மக்கள் 3-ம் தர மக்கள் என்று பாகுபாடு இந்த நாட்டில் இல்லை. எல்லோரும் ஒரு தர மக்கள்தான். அரசின் திட்டங்களுக்கு மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். அரசின் நல்ல திட்டங்களால் மன்னார் போன்ற பின்தங்கிய மாவட்டங்கள் முன்னேறும். ஒருநாட்டில் ஜனநாயகம் இருந்தால் ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக வாழமுடியும். அதனால் மக்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும்.

இவ்விழாவில் பஸ்நிலையம் அமைப்பதற்கு முன் ஒரு சகல வசதிகளுமடங்கிய பஸ்சாலையொன்று அமைத்துத்தர வேண்டும் என்றும் மேலதிக கொழும்பு-தலைமன்னார் கடுகதி புகையிரத சேவை ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும் அமைச்சரிடம் கோரிக்கை விடப்பட்டது.

அடிக்கல்நாட்டு விழாவில் சாலை அத்தியட்சகர் திரு. தியாகராசா வரவேற்புரை நிகழ்த்தினர். (அ)

நீதிபதிகள் விண்ணப்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன், சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்ற நீதிபதி சிவா பாலேந்திரா ஆகியோர் தங்குவதற்கு வீடு வசதியின்மையால் சாவகச்சேரி நீதிமன்ற வளவினுள்ளிருக்கும் இரண்டு வீடுகளையும் தங்களுக்கு வழங்குமாறு நீதியமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளனர். (க)

ஈரானிய ஷாவை

பனாமாவிலிருந்து இடம்மாற்றினால் பணயக் கைதிகள் விடுதலை தாமதமாகும்

வெளிநாட்டமைச்சர் ஸாதே கூறுகிறார்

தெஹ்ரான், மார்ச். 23 ஈரானிய ஷாவை பனாமாவிலிருந்து வேறுநாட்டுக்கு அமெரிக்கா மாற்ற முயற்சித்தால் ஈரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கர்களை விடுதலை செய்வது தாமதமாகும். இவ்வாறு ஈரானிய வெளிநாட்டமைச்சர் ஜனாப் குதுப் ஸாதே கூறினார்.

ஈரானிய ஷாவை ஈரானுக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈரான் அரசு ஈடுபட்டுவரும் வேளையில் அமெரிக்கா ஷாவை பனாமாவிலிருந்து வேறு இடத்துக்கு மாற்ற முயன்றுவருகிறது. இது பணயக் கைதிகள் விவகாரத்தை மேலும் சிக்கலாக்குமென்றும் ஜனாப் ஸாதே கூறினார்.

இதேவேளையில் ஈரானிய ஷாவையும் அவரது சொத்துக்களையும் ஈரானுக்குத் திருப்பித் தருமாறு பனாமா அரசை ஈரானிய மாணவர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் (இ)

அர்ஸ் காங்கிரஸ் கட்சியில் ஜெகஜீவன் சேர்வார்!

இருவரும் சந்தித்துப்பேசுவர்

புதுடில்லி, மார்ச். 23 ஜனதா கட்சியிலிருந்து அண்மையில் வெளியேறிய திரு. ஜெகஜீவன்ராமை அர்ஸ் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக் கொள்வது பற்றி உயர்மட்ட ஆலோசனைகள் நடைபெற்று வருகிறது.

அர்ஸ் இகாங்கிரஸ் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸும், திரு. ஜெகஜீவன்ராமும் இவ்விஷயம் குறித்து இன்று அல்லது நாளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என அர்ஸ் காங்கிரசைச் சேர்ந்த திருமதி தாரகேஸ்வரி சின்ஹா தெரிவித்துள்ளார்.

திரு. ஜெகஜீவன்ராமை அர்ஸ் காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக்கொள்வது பற்றி கீழ் மட்டத்தலைவர்கள் இப்போது பேச்சு நடத்தி வருகிறார்களென்றும் திருமதி சின்ஹா கூறினார். (இ)

உரிய சம்பளம் வழங்கப்பட வில்லையாம்

(யாழ்ப்பாணம்)

1976-ம் ஆண்டு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களுக்கு அதற்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் பலர் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்திடம் முறையிட்டுள்ளனர். (கு)



அருள் இசை முரசு நாகூர் ஈ. எம். ஹனிபாவை ஈழத்தின் வானொலிபுகழ் இஸ்லாமிய பாடகர் ராமேஷ் வைகுந்தநாதன் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

திரேசாவுக்கு 'பாரதரத்னா'; கவாஸ்கருக்கு 'பத்மபூஷண்'

ஜனாதிபதி விருதுகளை வழங்கினார்

புதுடில்லி, மார்ச். 23 நோபல் பரிசுபெற்ற அன்னை திரேசாவுக்கு இந்தியாவின் உயர்விருதான 'பாரத ரத்னா' கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட் வீரர் திரு. சுனில் கவாஸ்கருக்கு 'பத்மபூஷண்' விருது வழங்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேடவைபவம் ஒன்றில் இவ் விருதுகளை ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி வழங்கினார். (இ)

பாவனையாளர் சங்கங்கள் நாளைகச்சேரியில் கூடுகின்றன

[யாழ்ப்பாணம்]

பாவனையாளர் சங்கங்களின் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை யாழ் கச்சேரி மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன முகாமையாளர் கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனம், பெற்ரோலியக் கூட்டுத்தாபனம், சலுசலா, மரக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முகாமையாளர்கள், விற்பனை அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாவட்ட மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகத்தர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள், உணவுக் கட்டுப்பாடு அதிகாரிகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பாவனையாளர் சங்கங்களின் தலைவர்கள் செயலாளர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

சம்பந்தப்பட்ட இவர்களின் அதிகாரிகளும் பாவனையாளர் சங்கத்தலைவர்களும், செயலாளர்களும் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வு காண உதவுவார்கள்.

பொருட்களின் விநியோகம் அவற்றின் தரம், நியாயவிலை, பாவனையாளர்களின் விருப்பு, சட்டத்தை அமுல்நடத்துதல் ஆகிய விஷயங்கள் பற்றியும் மேற்படி கூட்டத்தில் ஆராயப்படும். (கொ'அ)

''சிறந்த ஆசிரியராக சாண்டஸ் விளங்கினார்''

(அரியாலை)

''அமரத்துவம் எய்திய சாண்டஸ் ஆசிரியர் ஆசிரியர்களுக்குள் சிறந்த ஆசிரியராகவும் நிர்வாகிகளுக்குள் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். 19 ம் 20 ம் நூற்றாண்டின் சமகாலங்களில் வாழ்ந்த இவர் நாட்டுக்கும் யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. இவர் கணிதம் அளவையியல், பொருளியல், வேதம் ஆகிய பாடங்களை மாணவர்களுக்குச் சிறந்த முறையில் போதிப்பதில் வல்லுனராக விளங்கினார்''

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் திரு இராசன் கதிர்காமர் நல்லூர் நாவலர் வீதியில் [illegible] இல்லத்தில் நடைபெற்ற அமரர் சாண்டஸின் நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உலக வானிலைதினம்

லண்டன், மார்ச். 23 20 வது உலக வானிலைதினம் இன்று உலக நாடுகளில் அனுசரிக்கப்பட்டது. (இ)

ஆற்றல் வெளிப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

''கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்ற முதுமொழி இக்காலக் கல்வித்திட்டத்திற்கும் சரியாகப் பொருந்துகின்றது. மாணவர்கள் தாம் அடிக்கடி காண்பவற்றைப் படிக்கவேண்டும்; படிப்பவற்றைக் கண்ணாலும் பார்க்கவேண்டும் ஒருபொருளை நேரில் பார்க்கமுடியாவிட்டால் அதை ஓவியமாகவரையவேண்டும். அல்லது அதைப்போன்று ஒன்றைச் செய்துவைக்கவேண்டும். இத்தகைய செயல்களில் ஈடுபடும்போது மாணவர்களின் ஆற்றல் வெளிப்படுகின்றது; அறிவு விசாலமடைகின்றது நாவும் காதும் மட்டுமல்லாமற் கண்ணும் கருத்தும் கையும் ஒன்றிணையும்போது கல்வி என்ற செயல் இலகுவாகின்றது''

விடத்தற்பளை கமலாசனி வித்தியாசாலையில் நடைபெற்ற ஆரம்பவகுப்புப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் திரு. சி. சிவசரவணபவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாசாலை அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் அவர் மேலும் பேசுகையில், ''ஒவ்வொரு மாணவரிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கும் என்பதை நாம் மறக்கலாகாது என்றும் அத்திறமையை இனங்கண்டு பாராட்டும்போது அவன் மகிழ்ச்சியடைகின்றான் என்றும் கூறினார்.

ஆசிரியர்கள் ம. கதிரித்தம்பி, எஸ். விஸ்வலிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். (க)

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் கனன் சாம் டி. ஹேவர்சிங்டன் அடிகளார் தலைமையில் இறுதி ஆராதனை நடைபெற்றது.

அருட்திரு தம்பிராசா அடிகள் அருளுரை நிகழ்த்தினார். [illegible] ஆராதனையை நடத்தினார். (க)

இன்றைய அரசியல் நிலை

அமிர், யோகேஸ் மட்டுநகரில் ஆலோசனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழர்விடுதலைக் கூட்டணி விஸ்தரிப்பு, கிளைகள் புனரமைப்பு, புதிய கிளைகள் அமைப்பு ஆகிய விடயங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம் பி திரு. வி. யோகேஸ்வரன் ஆகியோர் நேற்று முன் தினம் மட்டக்களப்பு கூட்டணிப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் காலை மட்டக்களப்பு வந்து சேர்ந்தஇவர்கள் இருவரும் தாமரைக்கேணியில் இந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர்.

மாலை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களுடன் இன்றைய அரசியல் நிலை குறித்து இவர்கள் கலந்துரையாடினர்.

கல்லடி உப்போடை சிவானந்த ஆச்சிரமத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், பி. கணேசலிங்கம், காசி ஆனந்தன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட மற்றும் சிலரும் கலந்து கொண்டனர்.

நேற்றைய நிகழ்ச்சி

இக்குழுவினர் நேற்றுக்காலை பட்டிருப்புத் தொகுதிக்கும் மாலைசம்மாந்துறை, கல்முனைத் தொகுதிகளுக்கும் விஜயம் செய்து ஆலோசனை நடத்தினர். (இ)

யாழ். செயலக ரயில் நிறுத்தும் இடத்திற்கு மேடை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ரயில்நிறுத்துமிடத்தில் ரயில் நிலையத்துக்கான நிரந்தர மேடை ஒன்று அமைக்கப்படஇருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்டுவருகிறார்.

இவ்விஷயம் குறித்து திரு. யோகேந்திரா, போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இந்த மேடையை அமைக்க உடன் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிவரை ரயில் சேவை ஒன்றை நடத்தவேண்டும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் அமைச்சரிடம் கேட்டுள்ளார். (கொ-நி)

கோழி நோய் பரவுகிறது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கோழி நோய் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான கோழிகள் இறந்துள்ளன. கோழிநோயை தடுக்க இப்போது மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. (கு)

புதிய நிர்வாகிகள்

(அரியாலை)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் கோப்பாய்க்கிளையின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக திரு. இ. கோபாலசிங்கமும், உபதலைவராக திரு. எம். கே. இளையப்புவும், செயலாளராக திரு. பேராயர் இம்மனுவேலும், உபசெயலாளராக திரு. க. தில்லைநடராசாவும், பொருளாளராகத் திரு. வ. தம்பியப்பாவும், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் சி. செல்வநாயகமும் சி. பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுக்கூட்டத்திற்கு மகாசபைத் தலைவர் திரு. எம். சிவதாசன் தலைமைவகித்தார். (க)

"பல்கலைக்கழக மாணவருக்கு ஆங்கிலஅறிவுபோதாததால் உயர் கல்வி பாதிப்பு"

—பேராசிரியர் கணேசலிங்கம்

(உடுப்பிட்டி)

'பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களிடம் ஆங்கில அறிவு போதியளவு இல்லாமையினால் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பெருங் கஷ்டமடைந்து வருகின்றனர். பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் ஆங்கில அறிவுடன் சென்றாலே இலகுவாக உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியும்.'

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் இரவு விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்கு செல்வி நா. ஷாமினி தலைமை வகித்தார்.

பேராசிரியர் கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

'பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி பெறும் மாணவர்கள் பயில்வதற்கான புதிய கண்டுபிடிப்புக்கள், பெரும்பாலான ஆராய்ச்சி முடிவுகள் ஆகியவற்றின் கட்டுரைகள் சர்வதேச மொழியான ஆங்கில மொழியிலேயே வெளிவருகின்றன. இவற்றை ஆங்கில அறிவில்லாத மாணவர்கள் வாசித்து விளங்கிக்கொள்வதோ அல்லது விரிவுரையாளர்கள் ஆங்கில மொழியில் நடத்தும் விரிவுரைகளைப் புரிந்துகொள்வதோ எமது மாணவர்களால் முடியாமல் உள்ளது.

'பல்கலைக்கழகங்களில் விரிவுரைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் தான் செயன்முறைக்கும் கொடுக்கப்படுகின்றது தற்போது பாடசாலைகளில் செயன் முறைப் பயிற்சி இல்லாமல் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலுள்ள சாதாரண செயன்முறைக் கருவிகளைப் பாவிப்பதில் தயக்கமடைந்து வருகின்றனர் இதனால் பல கருவிகளைக் கையாட முடியாத நிலையில் சேதப்படுத்தியும் வருகின்றனர் இது அவர்களின் பயிற்சியின்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

'பல்கலைக்கழகம் வரும் மாணவர்களின் மத்தியில் விரிவுரைகளுக்குப் பிந்திவரும் பழக்கம், விரிவுரையின்போது வம்பளத்தல், விரிவுரையை இடைநேரத்தில் விட்டுச்செல்லல் என்பன கவலைக்குரிய விடயமாகும் இது அவர்களின் உயர்கல்வியைப் பாதிக்கும் என்பதை உணர்ந்துகொள்வதில்லை. எனவே பல்கலைக்கழகம் வரும் மாணவர்கள் ஒழுங்கு, கண்ணியம், கட்டுப்பாட்டை அனுசரிக்கவேண்டும். பாடசாலைகளே சிறந்த ஒழுக்கமும், பண்பாடும் மிக்க மாணவர்களை உருவாக்கிப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

'ரியூஷன் வகுப்புகளில் ஆசிரியர்கள் சொல்வதெழுதிப் பழகிக் குறிப்பெடுத்த மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றவுடன் விரிவுரைகளைக் குறிப்பெடுக்கமுடியாது திண்டாடி வருகின்றனர். மாணவர்கள் தாமாகவே குறிப்பெடுத்துப் பழகி நினைவில் நிறுத்திக்கொள்ளப் பழகிக்கொள்ளல் வேண்டும்.'

'இலங்கையின் வடபகுதியில்தான் கல்வியில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணப்பகுதியில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கு அதிக பணம் செலவுசெய்துவருகின்றனர். வடபகுதியிலுள்ள சகல டியூட்டரிகளிலும் படிக்கும் எல்லாப் பிள்ளைகளும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற நோக்குடனேயே படிக்கின்றனர். அத்தனை பேரும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமானால் யாழ். பல்கலைக்கழகம் போதாது. மூன்று பல்கலைக்கழகங்கள் உருவாகினால்தான் இத்தனை பிள்ளைகளுக்கும் இடமளிக்கமுடியும்.'

மகாவித்தியாலய அதிபர் திரு. கே. குணரத்தினம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம், செல்வன்கள் எஸ். பரமநாதன், இரா. தனபாலசிங்கம், ரவீந்திரன் ஆகியோரும் பேசினர். திரு. கி. நடராசா நன்றி கூறினார். (அ)

ஆசிரிய நியமனம் வழங்கப்படலாம்

(மட்டக்களப்பு)

ஆசிரியநியமனத்துக்காக கடந்தஆண்டு நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் தேறியவர்களுக்கு மே மாதம் நியமனங்கள் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

மட்டக்களப்பு கல்விஇலாகாவினால் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை ஆகியோரின் சிபார்சில் கடந்தவருடம் அக்டோபர்மாதம் இருநூறு பேரளவில் ஆசிரியர்நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளிடம் சான்றிதழ்கள்பெறப்பட்டு நிபமனம் வழங்கவேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதேதினத்தில் மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் கல்விப்பணிப்பாளர் அன்றைய தினம் இல்லாமையால் மட்டக்களப்பில் நியமனம் வழங்கப்படவில்லை. மறுநாள் நியமனம் எதிர்பார்த்த இவ் விண்ணப்பதாரிகட்கு நியமனம் வழங்கவிருந்தவேளை கல்விச் சேவை ஆணைக்குழுவின் திடீர் உத்தரவின் பிரகாரம் ரத்துச் செய்யப்பட்டது.

தற்போது நிறுத்திவைக்கப்பட்ட ஆசிரியர்நியமனங்கள் பாடசாலை மறுதவணை ஆரம்பமாகும்போது மேமாதம் 3-ம் திகதி தொழில்வங்கி இலக்கமுடையவர்கட்கு வழங்கப்படலாம்என அறியப்படுகிறது. இந்நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில்இருந்தும் இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் தோற்றியமை குறிப்பிடத்தக்கது. (சு)

இல்ல விளையாட்டு

[சுழிபுரம்]

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில்நடைபெற்றது. போட்டிக்கு வித்தியாலய அதிபர் திரு. மு. அருணாசலம் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக திரு. நாக. பத்மநாதன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். திருமதி திருநாவுக்கரசு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். [சு]

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன்
கவிதா நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER
லிடோ (யாழ்.நகர்)
Daily: 10-30, 3-30, 6-30 & 9-30
போன்: 7698
Arabian Adventure
(Color)

ராணி (யாழ் நகர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்காராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம் கலைஞர் கருணாநிதி

மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 10-30 a.m., 2-30, 6-30, & 9-45 p m.
எம். ஜி. ஆர்- கே. ஆர். விஜயா
நல்லநேரம்
(புதிய பிரதி)

2nd Crowded week
SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-:0, 4-45, 7-00 & 9-30 p.m.
THAT MAN BOLT
Entertainment in Karate, Judo and Kick-Boxing
தற் மான் போல்ற்
பயங்கர காராட்டி ஜூடோ நிறைந்த
ஆங்கில சண்டைப்படம்

2nd Crowded week
REGAL JAFFNA.
Phone: 360
Daily at 10-30 a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
தெய்வம்
(கலர்-புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
கிருகப் பிரவேசம்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் (இருவேடம்)
ஸ்ரீகாந்த்-பிரமிளா
கைநிறைய காசு
(புதிய பிரதி)

பல வெற்றிப்படங்களை திரையிட்டு ரசிகர்களை மகிழ்வித்த
வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான ஈஸ்ரர்-புத்தாண்டு வெளியீடு !
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது
தினசரி 10-00, 1-30, 4-30, 7-15, 10-00
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
"கிழக்கே போகும் ரயில்" புகழ்
✶ சுதாகர் ✶ ராதிகா ✶ விஜயன்
✶ ரதி ✶ பாக்கியராஜ் ✶ கலா
மற்றும் பலர் நடித்த
காதல், வீரம், மர்மம் நிறைந்த தீந்தமிழ் திரையோவியம்
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)
திரைக்கதை டைரக்ஷன்:
வெள்ளிவிழா இயக்குநர்
பாரதிராஜா
இசையமைப்பு:
இளையராஜா

சாந்தி (யாழ்நகர்)
போன்: 7642 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
மஞ்சுளா
உத்தமன்
அடுத்த படம் கற்பூரம் (புதிய பிரதி)

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)

சகல விதமான, அச்சு மற்றும் கையெழுத்துப் பத்திரங்களை குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட காகிதத்தில் போட்டோ பிரதி செய்து கொடுக்கப்படும்.

SHARP PHOTO
10, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கி முன்பாக)

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

கார்ட்டரின் விசேட தூதர்

[வாஷிங்டன்[

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டரின் விசேஷ தூதுவராக, வெள்ளைமாளிகை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்று பனாமா பயணமானார். இவர் முன்னாள் மன்னர் ஷாவைச் சந்தித்து சில முக்கிய தீர்மானம் எடுப்பார்

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
டில்கா வாச் வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1 . ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்.

இளம்பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தந்தை தடியொன்றினால் தனக்கு அடித்துவிட்ட வேதனையைப் பொறுக்காத இளம் பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமான சம்பவம் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள கண்டாவளையில் நிகழ்ந்துள்ளது.

நச்சுத்திராவகம் அருந்தி மரணமான பொன்னையா ஞானேஸ்வரியின் (19வயது) மரணவிசாரணை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. மரணவிசாரணையின் போது மரணமானவரின் தந்தை பொன்னையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

மரணமானவர் எனது இரண்டாவது மகள். சம்பவதினம் எனது பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது மரணமானவருக்கும் ஏனைய சகோதரர்களுக்குமிடையில் சண்டைஏற்பட்டது. நான் மரணமான ஞானேஸ்வரிக்கு தடியொன்றினால் அடித்தேன். அதனால் ஆவேசம் கொண்ட எனது மகள் வீட்டில் இருந்த நச்சுத்திராவகத்தை அருந்திவிட்டார். மகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம், ஆஸ்பத்திரியில் மரணமானார்.''

மரணமானவரின் தந்தையைக் கண்டித்த மரணவிசாரணை அதிகாரி பிள்ளைகளை சிறு வயதில் கண்டித்து வளர்க்க வேண்டுமே தவிர வயது வந்த பின்னர் கண்டிக்கக் கூடாதெனவும் இப்பொழுது கண்டித்ததால் அநியாயமான முறையில் ஒரு இளம்பெண் தற்கொலைசெய்து கொண்டார் எனவும் தெரிவித்தார். விசாரணைமுடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (கொ)

மனைவி கண்டித்தார்; கணவன் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

மனைவியின் கண்டலத்தைப் பொறுக்காத கணவன், நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம், உருத்திரபுரத்தில் நடைபெற்றது.

மரணமான கணபதிப்பிள்ளை சின்னத்துரையின் மரண விசாரணை உருத்திரபுரத்தில் நடைபெற்றது

மரணமானவரின் மனைவி திருமதி சின்னத்துரை சாட்சியமளிக்கையில்கூறியதாவது:

எனது கணவனுக்கு பல் வருத்தம் இருந்துவந்தது. சம்பவதினம் அவர் மதுபோதையில் வீட்டிற்கு வந்ததைக்கண்டு எனக்கு வேதனை உண்டாயிற்று. அரை நான் கண்டித்தேன் இதனைப் பொறுக்காது திடீரென அவர் தோட்டத்திற்குச் சென்றார். அங்கு இருந்த நச்சுத்திராவகத்தை அருந்திவிட்டார் என்பதைப் பின்னர் தெரிந்து உடனடியாக அவரை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றேன். அங்கு அவர் மரணமானார்''

மரணவிசாரணை நடத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். [கா]

பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்திலிருந்து 'அற்றண்டன்' பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட 46 பேருக்கு இன்று யாழ் அரசினர் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவிருந்த மூன்றுமாத பயிற்சிவகுப்பு திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிறுசேவை ஊழியர்கள் மத்தியிலிருந்து நேர்முகப் பரீட்சை மூலம் 16 ஆண் ஊழியர்களும், 30 பெண் ஊழியர்களும் இந்த அற்றண்டன் பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டவுடன் நியமனம் வழங்குவதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் மேற்கொண்டிருந்தார்.

நேற்று முன்தினம் இந்த பயிற்சி வகுப்புகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கடித மூலம் திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது. [கு]

நாடுகண்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் கட்டத்திற்கு இன்றுவந்துவிட்டோம் என்றும், இத்திட்டத்துக்கு அமரர் டி. எஸ். சேனநாயக்காவே அத்திபாரமிட்டார் என்றும் கூறினார்.

நவசீனாவை ஒரு முன்மாதிரியாகக் குறிப்பிட்ட பிரதமர், ''வெளிநாடுகளின் எந்தவித உதவியையோ நவீன உபகரணங்களையோ பெற்றுக் கொள்ளாமல், அயராத முயற்சியை முதலீடாகக் கொண்டு சீன மக்கள் தங்கள் நாட்டை உன்னதநிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். இதனை நாம் சிந்திக்கவேண்டும்'' என்று கூறினார்.

பிரிட்டிஷ் அமைச்சர்

அங்குரார்ப்பண விழாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாகக்கலந்துகொண்ட பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. மார்ட்டின் கருத்து வெளியிடுகையில் உலகின் பல்வேறு நாடுகள் மேற்கொள்ளும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்போல அமைந்திருக்கும் இத் திட்டம் நிச்சயம் வெற்றிபெறுமென்ற நம்பிக்கை தமக்கு ஏற்பட்டுள்ளதென்றும் இத்திட்டத்தின் மூலம் இந்தநாட்டின் வருங்காலச் சந்ததியினர் பெருநன்மை அடைவார்கள் என்றும் கூறினார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா பேசுகையில்; விக்டோரியா திட்டம் இந்தநாட்டில் புதுயுகம் படைக்குமென்றும் இதன்மூலமாக 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறினார்.

உதவிப் பொருட்கள் இன்னும் கிடைக்கவில்லை

(சாவகச்சேரி)

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வேம்பிராய் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் தெருவாரக்குளம் சிரமதான மூலம் ஏராளமான சிரமதான தொண்டர்களால் ஆழமாக்கப்பட்டது. ஆனால் இற்றை வரைக்கும் சிரமதான தொண்டர்களுக்கு மா, சீனி, பருப்பு, கருவாடு ஆகிய பொருட்கள் வழங்கப்படவில்லை.

எம்.பி.க்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தி அல்லது நீக்[illegible] ஜனாதிபதியிடம் கேட்[illegible] தமிழ்க்காங்கிரஸ்குழு கோரியிருந்தது. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதை [illegible]ணைக்குழு செயலாளரிடம் கேட்டு எழுதுமாறு காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் பொதுச்செயலாளரைப்பணிப்பதென்றும் தீர்மானித்தது. (கெ)

மரண அறிவித்தல்

எஸ். ரி. சின்னத்துரை ஜே. பி.

லீலா ஸ்ரோர்ஸ், நியூ லீலா அச்சகம், கொழும்பு ஏ.கே. சங்கரன் அன்ட் கம்பனி, கொழும்பு - யாழ்ப்பாணம் எஸ்.ஏ. செல்லையா அன் கம்பனி ஆகியவற்றின் பிரதம பங்காளரும், கொழும்பு ராம் சன்ஸ் ஹாட்வெயர் எண்டர்பிறைசஸ் லிமிட்டெட் தலைவரும், சமாதான நீதவானுமான எஸ். ரி. சின்னத்துரை அவர்கள் காலமானார். இவர், சௌபாக்கியத்தின் அன்புக் கணவரும், சட்டத்தரணிகளான சுந்தரலிங்கம் ஜே. பி. யூ. எம் , பாலேந்திரா, டாக்டர் சோமசேகரம் [லண்டன்] அருளானந்தன் [ராம்சன்ஸ் ஹாட்வெயர்], தேசபந்து [லீலா என்ஜினியரிங் வேக்ஸ்], லோகநாதன், தனபாலா [லீலா ஸ்ரோர்ஸ்], சொக்கநாதன் [நீர் வழங்கு சபை], ரவீந்திரா [ஏ. கே. சங்கரன்ஸ்], ஆகியோரின் அன்புத்தந்தையும், தேவி, புவனா, இந்திரா [லண்டன்], அமுதா, சரோஜினி, கமலவேணி ஆகியோரின் அருமை மாமனாரும், திருமதி நேசம்மா தம்பையாவின் சகோதரரும், மஞ்சுளா [லண்டன்], ஜானகி [ரேக்குவான் யங்ஸ்], முரளி, மோகன், ஹரி, அர்ஜுனா [சென். தோமஸ்], கீதா [மகளிர் கல்லூரி], தர்ஷினி, சுபாசன் [லண்டன்], அனுஜன், அஞ்சனா [சென். பிரிஜட்] டிஷானி, டினேஷ் [நல்லாயன் கன்னியர் மடம்], டர்ஷான் [சென். ஜோசேப்], டினேஷன் ஆகியோரின் பேரனுமாவர்.

''லீலா இல்லம்''
62, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12.

5293

மரண அறிவித்தல்

திருமதி செ. சிவபாக்கியம்

செல்லப்பா சிவபாக்கியம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மானிப்பாய் 4-ம் கட்டை இல்லியம்பலம் செல்லப்பாவின் மனைவியும், மகேஸ்வரி, காலஞ்சென்ற மகேசன், நாகேசன் (நில அளவைத் திணைக்களம்) நாகேஸ்வரி ஆகியோரின் அன்னையும், இராமச்சந்திரனின் சகோதரியுமாவர். ஈமைக்கிரியைகள் [24-03-1980] இன்று திங்கள் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

மு. மகாலிங்கம்

24, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

5294

மக்கினொன் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka [illegible] The EelanaaduP. B. No. 49, Telegram Eelanadu. Phone [illegible]